DEPOSITION OF WITNESS

IN THE COURT OF SPECIAL COURT FOR TRIAL OF CASES REGISTERED UNDER SC/ST(POA)ACT, 1989, RAMANATHAPURAM

**Spl.Sessions Case No.19/2024**

அ.சா.7

Prosecution witness

| | | | |
|---|---|---|---|
| Name: | போஸ் | Caste: | |
| Father's Name: | சோலையப்பன் | Calling: | விவசாயம் |
| Village: | நெறிஞ்சிப்பட்டி | Religion: | |
| Taluk: | கமுதி | Age: | 57 |

Solemnly affirmed in accordance with the provisions no of Act X of 1873 of the day of 09.07.2025

( 1 முதல் 3 எதிரிகள் ஆஜர்படுத்தப்பட்டனர்.)

**முதன்மை விசாரணை**

நான் கமுதி தாலுகா கோவிலாங்குளம் காவல்நிலைய எல்லைக்குட்பட்ட நெறிஞ்சிப்பட்டி கிராமத்தில் வசித்து விவசாய வேலை செய்து வருகிறேன். அ.சா.1 தாமரைச் செல்வி என் மகள். அ.சா.2 முதல் 4 சாட்சிகளான முருகவேல், கரன், முனீஸ்வரி ஆகியோர்களைத் தெரியும். நான் பட்டியல் இனத்தை சேர்ந்த புதிரை வண்ணான் சாதியை சார்ந்தவர். என் மகள் தாமரைச் செல்வியை நரிக்குடியைச் சேர்ந்த முனிசெல்வம் என்பவருக்கு 7 வருடங்களுக்கு முன்பு திருமணம் செய்துகொடுத்தேன். என் மகளும் மருமகனும் சேர்ந்து வாழ்ந்து வருகிறார்களா என்றால் இல்லை. என் மகள் மருமகனுடன் கோபித்து கொண்டு வந்து ஒரு வருடமாக என் வீட்டில் இருந்து வருகிறார். கடந்த 29.01 வருடம் ஞாபகமில்லை. சுமார் ஒரு வருடத்திற்கு முன்பு என் மகளுக்கு குடலிறக்கம் இருந்ததால் வயிற்றுவலி ஏற்பட்டது. அதனால் அருப்புக்கோட்டையில் உள்ள சிகிச்சை பெறுவதற்காக என் மைத்துனர்

முருகவேலுடன் இருசக்கர வாகனத்தில் அனுப்பி வைத்தேன். என் வீட்டில் இருந்து என் மகளும் மைத்துனர் முருகவேலும் கிளம்பும்போது காலை 11.00 மணி இருக்கும். என் மகள் மருத்துவமனைக்கு சென்று மருத்துவரை பார்த்துவிட்டு மதியம் 2.00 மணியளவில் அருப்புக்கோட்டை– கமுதி ரோட்டில் இடைச்சியூரணி உடைமரம் வெள்ளைச்சாமி கோவில் அருகே இருசக்கர வாகனத்தில் வந்தபோது என் மகள் சிறுநீர் கழிக்க வேண்டும் என கூறியதால் இருசக்கர வாகனத்தை நிறுத்தி என் மகள் சிறுநீர் கழிக்க பக்கத்தில் சென்றுள்ளார். என் மகள் உட்கார்ந்து சிறுநீர் கழித்துவிட்டு எந்திரிக்கும்போது நிதீஷ் என்பவர் கத்தியால் மிரட்டி கற்பழித்துவிட்டார். அவருக்கு உதவியாக வெள்ளை சட்டை போட்ட கட்டம் போட்ட சட்டை அணிந்தவர் நின்றார். நான் அருகில் நின்று பார்த்தேன். அவரும் கத்தி வைத்திருந்தார். என் மைத்துனர் முருகவேல் உள்ளே சென்ற என் மகள் வரவில்லையே என சென்றார். நிதிஷ் மற்றும் வேல்முருகன் இருவரும் கத்தியால் சண்டை போட்டுக்கொண்டிருந்தார்கள். அவர்கள் இருவரும் சேர்ந்து கத்தியால் மிரட்டி என்ன சாதி என என் மைத்துனர் முருகவேலை கேட்டார்கள். என் மைத்துனர் புதிரை வண்ணான் சாதியை சேர்ந்தவர் என சொன்னார். சாட்சி என் பிள்ளை வாழ்க்கை போச்சு என அழுதுகொண்டு நீதிமன்ற உத்தரவின்றி சாட்சி கூண்டிலிருந்து இறங்கி வெளியே சென்றுவிட்டார். எனவே முதல் விசாரணை முடித்துவைக்கப்படுகிறது.

Sd/- C. Mohanram

Sessions Judge,
Special Court for Trial of Cases Registered
under SC/ST(POA) Act,
Ramanathapuram.(FAC)

DEPOSITION OF WITNESS
IN THE COURT OF SPECIAL COURT FOR TRIAL OF CASES REGISTERED
UNDER SC/ST(POA)ACT, 1989, RAMANATHAPURAM
**Spl.Sessions Case No.19/2024**

அ.சா.8

Prosecution witness

| | | | |
|---|---|---|---|
| Name: | சுப்பு | Caste: | |
| Husband Name: | பாண்டி | Calling: | கூலிவேலை |
| Village: | கஞ்சநாயக்கன்பட்டி | Religion: | |
| Taluk: | அருப்புக்கோட்டை | Age: | 38 |

Solemnly affirmed in accordance with the provisions no of Act X of 1873 of the day of 09.07.2025

( 1 முதல் 3 எதிரிகள் ஆஜர்படுத்தப்பட்டனர்.)

**முதன்மை விசாரணை**

நான் விருதுநகர் மாவட்டம் அருப்புக்கோட்டை தாலுகா கஞ்சநாயக்கன்பட்டியில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா.1 தாமரை செல்வி, அ.சா.2 முருகவேலை தெரியும். அ.சா.1 தாமரை செல்வி என் உடன் பிறந்த அக்கா மகள், அ.சா.2 முருகவேல் என் பெரியம்மா மகன், தம்பி. அ.சா.3 கரன் என் அக்கா மகன், அ.சா.4 முருகேஷ்வரி என் உடன் பிறந்த அக்கா. நாங்கள் இந்து புதிரை வண்ணான் சமூகத்தை சார்ந்தவர்கள். அ.சா.1 தாமரை செல்வி எங்கு குடியிருந்து வந்தார் என்றால் நெறிஞ்சிப்பட்டியில் அவரது அம்மா வீட்டில் இருந்தார். கடந்த 01.01.2024ம் தேதி இராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கு சென்று தாமரை செல்வியை பார்த்தேன். தாமரை செல்வி மருத்துவமனையில் இருப்பதாக என் பெரியக்கா சொன்னதால் சென்றேன். என் அக்கா மகள் தாமரை செல்வியிடம் விசாரித்தபோது நானும் முருகவேல் மாமாவும் 29.01.2024ம் தேதி அருப்புக்கோட்டையில்

குடலிறக்கத்தால் ஏற்பட்ட வயிற்றுவலிக்கு காண்பிப்பதற்காக இருசக்கர வாகனத்தில் சென்றதாகவும், இடைச்சியூரணி பக்கத்தில் வெள்ளைச்சாமி கோவில் அருகே சென்றபோது சிறுநீர் கழிக்க வேண்டும் என சொன்னேன் என்றும், முருகவேல் வண்டியை நிறுத்தி போய் வர சொல்லியபோது அந்த சமயத்தில் 3 நபர்கள் செடிக்குள் மது அடித்துக்கொண்டிருந்ததாகவும் என் அக்கா மகளை அந்த மூவரும் பிடித்து வைத்துக்கொண்டதாகவும் என் அக்கா மகள் மாமா என சத்தம் போட்டு கூப்பிட்டபோது, என் தம்பி முருகவேல் உள்ளே சென்றபோது அந்த மூவரும் என் தம்பியையும் பிடித்துக்கொண்டதாகவும் அந்தமூவரும் என் தம்பியை கத்தியை காட்டி மிரட்டி நீ என்ன சாதி என கேட்டதாகவும், அதற்கு என் தம்பி SC என கூறியபோது அந்த மூவரும் SC–ல் பல சாதிகள் உள்ளன, நீ என்ன சாதி என சொல்லு என கேட்டுள்ளார்கள். என் தம்பி முருகவேல் சட்டைக்குள் இருந்த ரூபாய் 3000 பணத்தை அந்த 3 நபர்களில் ஒருவர் எடுத்ததாகவும், என் அக்கா மகள் சட்டைக்குள் இருந்த ரூபாய் 500 ஐ அஜித் என்பவர் எடுத்ததாகவும், கருப்பு சட்டை போட்டிருந்த அஜித் என்பவர் முதலில் என் அக்கா மகளை கற்பழித்ததாகவும், அதற்கு பின்பு வெள்ளை சட்டை போட்டிருந்த நபர் கற்பழித்ததாகவும், 3 வது நபர் பார்த்து கொண்டிருந்ததாகவும் சொன்னாள். இதுசம்பந்தமாக போலிசார் என்னை என் வீட்டிற்கு வந்து விசாரித்தாகர்ள்.

<u>1 ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:–</u>

எனது ஊரான கஞ்சநாயக்கன் பட்டிக்கும் நெறிஞ்சிபட்டிக்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் பஸ்ஸில் சென்றால் அரை மணி நேரம் ஆகும். ஒரே பஸ்ஸில் செல்லலாம். தாமரை செல்வி கணவரை பிரிந்து எத்தனை வருடங்கள் தனியாக வாழ்ந்து வந்தார்கள் என்றால் ஆறு

வருடங்கள். தாமரை செல்வி என்ன வேலை பார்த்தார் என்றால் வீட்டில் இருந்து கொண்டு தையல் தொழில் செய்து வந்தார். சம்பவம் குறித்து எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். எத்தனை நாட்கள் கழித்து சம்பவம் குறித்து தெரியும் என்றால் சம்பவம் நடந்த அன்று இரவே எனக்கு சம்பவம் குறித்து சொன்னார்கள். நான் சொன்னதுபோல் சம்பவம் குறித்து யாரிடமிருந்தும் நான் கேள்விப்படவில்லை என்றால் சரியல்ல. நான் போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**3ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

அ.சா.1 தாமரை செல்வியுடன் உடன் பிறந்தவர்கள் எத்தனை ஆண்கள், எத்தனை பெண்கள் என்றால் 2 பையன்கள் மட்டுமே. உடன் பிறந்த சகோதரி கிடையாது என்றால் சரிதான். நான் மருத்துவமனையில் எந்த தேதியில் சென்று பார்த்தேன் என்றால் 1ம் மாதம் 1ம் தேதி எந்த மருத்துவமனை என்றால் இராமநாதபுரம் அரசு மருத்துவமனை. சம்பவம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்றும், அ.சா.1 தாமரை செல்வி என் உறவினர் என்பதாலும், காவல்துறை கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**2ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

இல்லை

Sd/- C. Mohanram

Sessions Judge,
Special Court for Trial of Cases Registered
under SC/ST(POA) Act,
Ramanathapuram.(FAC)

DEPOSITION OF WITNESS
IN THE COURT OF SPECIAL COURT FOR TRIAL OF CASES REGISTERED
UNDER SC/ST(POA)ACT, 1989, RAMANATHAPURAM
**Spl.Sessions Case No.19/2024**

அ.சா.9

Prosecution witness

| | | | |
|---|---|---|---|
| Name: | வீரப்பன் | Caste: | |
| Husband Name: | சர்க்கரை | Calling: | விவசாயம் |
| Village: | தலைவநாயக்கன்பட்டி | Religion: | |
| Taluk: | கமுதி | Age: | 39 |

Solemnly affirmed in accordance with the provisions no of Act X of 1873 of the day of 09.07.2025

( 1 முதல் 3 எதிரிகள் ஆஜர்படுத்தப்பட்டனர்.)

**முதன்மை விசாரணை**

நான் கமுதி தாலுகா தலைவநாயக்கன்பட்டியில் குடியிருந்து விவசாய வேலை செய்து வருகிறேன். எங்கள் ஊரைச் சேர்ந்த முத்தப்ப நாயக்கர் மகன் சுப்பையாவை தெரியுமா என்றால் தெரியும். கடந்த 01.02.2024 ம் தேதி காலை 6.30 மணியளவில் நானும் என் மாமா சுப்பையாவும் கமுதி – அருப்புக்கோட்டை ரோட்டில் இடைச்சியூரணி விலக்கு அருகே பருத்தி செடி பிடிங்கி கொண்டிருந்தோம். அப்போது கமுதியில் இருந்து போலிஸ் ஜீப் வந்து நின்று கொண்டிருந்தது. போலிசார் எங்களை கூப்பிட்டு ஊர் பெயர் விவரம் விசாரித்தார்கள், சொன்னோம். போலிசார் இரண்டு நாட்களுக்கு முன்பு பக்கத்தில் ஒரு வழிப்பறியும் கற்பழிப்பும் நடந்தது என்றும், அந்த இடத்திற்கு கூட்டி சென்றார்கள் என்றும், அந்த இடம் கமுதி – அருப்புக்கோட்டை ரோட்டிற்கு அருகே வெள்ளைச்சாமி கோவிலுக்கு தெற்கு பக்கம் சுமார் 50 மீ தூரத்திற்கு கூட்டி சென்றார்கள். அந்த இடம் கருவ முள் காடு. அந்த இடத்தில்

போலிசார் ஒரு படம் வரைந்தார்கள். அதற்கு சாட்சியாக கையெழுத்து போடுகிறீர்களா என கேட்டார்கள். நானும் என் மாமாவும் போடுகிறோம் என சொல்லி போட்டோம். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள 1 ம் கையெழுத்து என்னுடையது. 2 வது கையெழுத்து என் மாமா சுப்பையா கையெழுத்து. பார்வை மகசர் **அ.சா.ஆ.3**. போலிசார் அதே இடத்தில் ஒரு பர்ஸ் எடுத்தார்கள். அந்த பர்ஸில் ஒரு ஆதார் கார்டு நகல் இருந்தது. அந்த ஆதார் கார்டு நகலை எங்களிடம் போலிசார் காண்பித்தார்கள். அந்த ஆதார் கார்டு மற்றும் பர்ஸ் எடுத்ததை ஒரு பேப்பரில் எழுதினார்கள். அதில் நானும் என் மாமா சுப்பையும் கையெழுத்து போட்டோம். என்னிடம் காட்டப்படும் அத்தாட்சியில் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையது. 2 வது கையெழுத்து என் மாமா சுப்பையா கையெழுத்து. அந்த அத்தாட்சி **அ.சா.ஆ.4**. போலிசார் எங்கள் முன்னிலையில் கைப்பற்றிய மணிபர்ஸ் மற்றும் ஆதார் நகலை அடையாளம் காட்ட முடியுமா என்றால் முடியும். நீதிமன்றத்தில் காண்பிக்கப்பட்ட மஞ்சள் நிறமுள்ள மணிபர்ஸ் மற்றும் அ.சா.1 தாமரை செல்வியின் ஆதார் கார்டு (புகைப்பட)நகலை சாட்சி அடையாளம் காண்பித்தார். இதுசம்பந்தமாக போலிசார் என்னை அத்தாட்சி தயார் செய்த இடத்தில் மட்டும் விசாரித்தார்கள்.

**<u>1 ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:–</u>**

எங்கள் ஊருக்கும் இடைச்சியூரணி விலக்கிற்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் 2 கி.மீ. இடைச்சியூரணி விலக்கிற்கு எந்த திசையில் கருவக்காடு உள்ளது என்றால் தெற்கு திசை. கமுதி அருப்புக்கோட்டை மெயின்ரோட்டிலிருந்து எவ்வளவு தூரத்தில் நானும் என் மாமாவும் பேசிகொண்டிருந்தோம் என்றால் கருவக் காட்டிற்குள்

பேசிக்கொண்டிருக்கவில்லை எங்கள் வயல் காட்டில் பேசிக்கொண்டிருந்தோம். போலிசார் எங்களை அழைத்து நாங்கள் சென்றோமா அல்லது நாங்களாக சென்றோமா என்றால் ரோட்டு அருகே எங்கள் பருத்திகாடு உள்ளதால் போலிசார் கூப்பிட்டு விசாரித்தார்கள். நான் சொன்னதுபோல் சம்பவ இடத்திற்கு நானும் என் மாமாவும் செல்லவில்லை என்றால் சரியல்ல. எங்கள் முன்பாக போலிசார் பார்வை மகசர் , வரைபடம் தயார் செய்யவில்லை என்றால்சரியல்ல. நாங்கள் கையெழுத்து செய்த ஆவணங்கள் காவல்நிலையத்தில் வைத்து பின்னிட்டு தயார் செய்யப்பட்டவை என்றால் சரியல்ல. நான் சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில், விதத்தில் போலிசார் அத்தாட்சியின் பேரில் எந்த பொருளும் கைப்பற்றவில்லை என்றால் சரியல்ல. அத்தாட்சி பின்னிட்டு காவல்நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. காவல்நிலையத்தில் வைத்துதான் நாங்கள் அத்தாட்சியில் கையெழுத்து போட்டோம் என்றால் சரியல்ல.

**3 ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

நாங்கள் போலிஸ் வாகனத்தில் எவ்வளவு தூரம் சென்றோம் என்றால் நடந்துதான் சென்றோம். பருத்தி செடி நாங்கள் பிடிங்கிய இடம் எங்கள் இடமா என்றால் அடுத்தவர் இடமா என்றால், எங்கள் இடம். எங்கள் இடத்தின் சர்வே எண் என்ன என்றால் ஞாபகமில்லை. அந்த இடம் யார் பெயரில் உள்ளது என்றால் என் அப்பா பெயரில் உள்ளது. போலிஸ் எங்களை அழைத்து செல்லும்போது எத்தனை காவலர்கள் வந்தார்கள் என்றால் 3 பேர். அந்த மூன்று நபர்களின் பெயர், பதவி தெரியுமா என்றால் ஒருவர் ஆய்வாளர், மற்றவர்கள் பதவி விவரம் தெரியாது. அவர்கள் சீருடையில் இருந்தார்களா என்றால் ஆமாம். நாங்கள் கையெழுத்து

போட்ட பேப்பரில் என்ன எழுதியிருந்தது என தெரியுமா என்றால் ஒரு பேப்பரில் படம் வரைந்திருந்தார்கள். அதில் கையெழுத்து போட்டோம். மற்றொரு பேப்பரில் மணிபர்ஸ–ம் ஆதார் கார்டு நகலும் கைப்பற்றப்பட்டது. எழுதி படம் வரைந்தது யார் என்றால் வந்த போலிஸ்காரர்களில் ஒருவர் அவர் பெயர் தெரியாது. கருப்பு பேனாவில் எழுதப்பட்டதா, ஊதா பேனாவில் எழுதப்பட்டதா என்றால், ஊதா. நான் சொன்னதுபோல் பருத்தி செடி பிடிங்கி இருந்தால் எங்கள் இடத்தின் சர்வே எண் தெரிந்திருக்கும் என்றும், இல்லை என்பதால் தான் தெரியவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. நாங்கள் வெள்ளை பேப்பரில் கையெழுத்து போட்டதால்தான் எழுதி முடித்ததற்கு கீழே சற்று தள்ளி கையெழுத்துகள் உள்ளது என்றால் சரிதான். இந்த வழக்கு பற்றியும், வரைபடம், அத்தாட்சி தயார் செய்தது பற்றியும் எனக்கு எதுவும் தெரியாது என்றும் போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**2ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

**இல்லை**

Sd/- C. Mohanram

Sessions Judge,
Special Court for Trial of Cases Registered
under SC/ST(POA) Act,
Ramanathapuram.(FAC)